# ஆண்டறிக்கையும் கணக்குக் கூற்றும்

# 2012

## தேசிய வடிவமைப்பு நிலையம்

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 01. பணிப்பாளர் சபை அறிக்கை | 1-24 |
| 02. 2012 டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் | 25-40 |
| 03. 2012 கணக்குளைப் பற்றியகணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 41-51 |

# பொருளடக்கம்

நிறுவன சட்டமூலம் மற்றும் பதிவு

நோக்கு

பணித்திட்டம்

குறிக்கோள்கள்

<u>நிறுவன முகாமைத்துவம்</u>

பணிப்பாளர் சபை

சிரேட்ட முகாமைத்துவம்

நிறுவன அமைப்பு

மனித வளம்

நிதிச் செயற்பாடுகள்

அபிவிருத்தி நடவடிக்கைகள்

சேவை வழங்கல்

2012 டிசம்பர் 31ம் திகதிக்கு முடிவடையும்
ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள்

2012 கணக்குகள் பற்றி கணக்காய்வு தலைமையதிபதியின் அறிக்கை

# நிறுவன சட்ட மூலம் மற்றும் பதிவு

தேசிய வடிவமைப்பு நிலையம் 1982 இலக்கம் 35 ந்தைக் கொண்ட தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் துணை நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் 1983ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் தேசிய கைவினைத் திறன் கைத்தொழில் கலைஞர்களின் அபிவிருத்தியை பிரதானமாகக் கருத்திற் கொண்டு செயற்படும் சேவை வழங்கும் அரச நிறுவனமாகும்.

**நிறுவனத்தின் நோக்கு( vision )**

புத்தாக்க அபிவிருத்தி மற்றும் புத்தாக்க வடிவமைப்புகளை அறிமுகஞ் செய்வதன் மூலம் கைவினத்திறன் துறையை சிறந்த உயிரோட்டமுள்ள துறையொன்றாக மாற்றுதல்

**நிறுவனத்தின் பணித்திட்டம்( Mission )**

மேம்படுத்தல், அபிவிருத்தி, திறன்களை கட்டியெழுப்புதல், விளம்பரப்படுத்துதல் மற்றும் பிரதான நீரோட்டத்துடன் இணைத்தல் மூலம் சந்தைக்கேற்ற சிறந்த வடிவமைப்புக்களை கொண்ட படைப்புகளை அறிமுகஞ் செய்தல்

**நிறுவனத்தின் குறிக்கோள்கள்( Objectives )**

- கைவினைத்திறன் தொழிற் கலைஞர்களினால் தற்பொழுது தயாரிக்கப்படும் கைவினைத்திறன் பொருட்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் தேசிய சந்தையைப் போன்றே வெளிநாட்டு சந்தையின் தற்கால மற்றும் எதிர்கால மாற்றங்களுக்கேற்ற புத்தாக்கங்களை அறிமுகஞ் செய்தல்.
- உற்பத்தியின் அளவை அதிகரித்தல் மற்றும் உயர் வேலைப்பாடு கொண்ட கைவினைத்திறன் பொருட்களை உற்பத்தி செய்வதை நோக்காகக் கொண்டு பொருத்தமான தொழிநுட்ப முறைகளையும், மூலப்பொருட்கள் தயாரிக்கக் கூடிய முறைகளையும் அறிமுகஞ் செய்தல்.
- வருமானத்தை அதிகரிப்பதன் மூலம் கைவினைத்திறன் கைத்தொழிற் துறையின் உயர்ந்த வளர்ச்சியை நோக்காகக் கொண்டு கலைஞர்களுக்கு உயர் செய்முறை திறன், தொழிநுட்பம் மற்றும் வடிவமைப்பு அபிவிருத்திப் பயிற்சிக்கு உதவியளித்தல்.
- கைவினைக் கைத்தொழிற் படைப்புகளுக்காக மிகவும் திறன் வாய்ந்த, நெகிழ்வுத் தன்மையைக் கொண்ட செயற்கிரமங்களை அறிமுகப்படுத்தல்
- கைவினைத்திறன் கலைஞர்களுக்கு நவீன தொழிநுட்ப முறைகளை உபயோகிப்பதற்கு வசதிகளை வழங்குவதற்காக பொது வசதிகளை பெற்றுக் கொள்ளக் கூடிய பொது வசதிகள் சேவைகளை வழங்கல்.
- வெளியீடுகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் மற்றும் நூலக வசதிகளை வழங்குவதன் மூலம் கைவினைத்திறன் கலைஞர்களுக்கு, விற்பனையாளர்களுக்கு மற்றும் கைவினைக் கைத்தொழில் துறையில் சம்பந்தப்பட்டுள்ளவர்களுக்கு தேவையான தகவல்களை வழங்குதல்.
- அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் வேண்டுகோளுக்கேற்ப வடிவமைப்பு ஆலோசனை சேவைகளை வழங்கல்
- வடிவமைப்பு உருவாக்கும் திறன்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் தொழிற்கல்வி வேலைதிட்டங்களை நடாத்துதல்.

# அமைப்பு

**தேசிய வடிவமைப்பு நிலையம்**, அனைத்து கைத்தொழிற் துறையின் வளர்ச்சியை கருத்திற் கொண்டு தன்னுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. மொரட்டுவை, கட்டடுபெத்தை, டி மெல் வீதி, இலக்கம் 10ல் அமைந்துள்ள பிரதான காரியலயத்தின் தலைமைத்துவம் மற்றும் மத்திய மாகாணத்தை உள்ளடக்கியதாக கண்டி கலாபுரய, நத்தரம்பொத்தை கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள கிளைக் காரியாலயத்தின் ஒத்துழைப்பின் மூலமும் பல்வேறு செயற்பாடுகளை செயற்படுத்தி கைவினைக் கைத்தொழிலாளர்களை மேம்படுத்துவதற்கு அரப்பணிப்புடன் செயலாற்றுகிறது.

இதற்கு மேலதிகமாக, டிப்ளோமா பாடநெறியின் மூலம் புத்தாக்குனர்களை உருவாக்கும் நிலையமொன்றாகச் செயற்படும் தேசிய வடிவமைப்பு கல்லூரி பிரதான காரியாலய வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளதோடு, அதன் மூலம் படைப்புத் திறனுள்ள இளைஞர்கள் மற்றும் யுவதிகள் தேசிய மட்டத்திலிருந்து சர்வதேச மட்டத்த்திற்குச் செல்லக் கூடிய தொழிற்சார் அறிவைப் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, நத்தரம்பொத்தை கிளைக் காரியாலயத்தில் நிறுவப்பட்டுள்ள பித்தளை, லாக்ஸா மற்றும் தோற்பொருட்கள் சார்ந்த வேலைதளம் மற்றும் பொது வசதிகள் நிலையம் ஆகியவைகள் மூலம் கைவினைக் கலைஞர்களுக்கு தொடர்ச்சியான சேவைகள் வழங்கப்படுகின்றன.

தேசிய வடிவமைப்பு நிலையம் தனது நோக்கங்களை முன்னிலைப்படுத்தி செயற்பாட்டு பணித்திட்டங்களின் வாயிலாக தனது குறிக்கோள்களை அடையும் நோக்குடன் பிரதான காரியாலயத்தின் தலைமைத்துவம் மற்றும் நத்தரம்பொத்தையில் நிறுவப்பட்டிருக்கும் கிளைக் காரியாலயம் ஆகியவைகளின் ஒத்துழைப்புடன் செயற்றிட்டத்திற்கமைவான செயற்பாடுகளை நிறைவேற்றுகின்றது. இதற்கு மேலதிகமாக, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டல் மற்றும் சகோதர நிறுவனங்களைப் போன்றே மாகாண சபைகள், கைவினைக் கைத்தொழிற் துறையைச் சார்ந்த பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பும் இந்நிறுவனத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தொடர்ந்து உதவுவதோடு, இத்துறையில் ஈடுபட்டுள்ள தன்னார்வ நிறுவனங்கள், கைவினைக் கைத்தொழிற் கலைஞர்கள் மற்றும் ஏனைய வெளியார் நிறுவனங்கள் ஆகியவைகள் மேற் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைவதற்காக எங்களுடன் தொடர்ச்சியாக இணைந்து அவைகளின் சேவைகளை வழங்குகின்றன.

# கட்டமைப்பு

தேசிய வடிவமைப்பு நிலையம் தனது குறிக்கோள்களை அடைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அதன் பிரதான காரியாலயம் இல.10, டி மெல் வீதி, கட்டுபெத்தை, மொரட்டுவை எனும் இடத்தில் நிறுவப்பட்டுள்ளதோடு, அப்பிரதான கரியாலய வளவினுள் வேலைதளம் மற்றும் வடிவமைப்புக் கல்லூரி ஆகியவைகள் இயங்குகின்றன. இதற்கு மேலதிகமாக பிரதான கருத்திட்ட காரியாலயம் கண்டியில் கலாபுரய கிராமத்தில் அமைந்துள்ள நத்தரம்பொத்தையில் நிறுவப்பட்டள்ளதோடு, அங்கு பித்தளை மற்றும் லாக்ஸா வேலைதளங்களைப் போன்றே பொது வசதிகள் நிலையமொன்றும் இயங்குகின்றது. அதேபோன்று பிரசைகள் உல்லாசப் பிரயாண கிராமக் கருத்திட்டமொன்றும் இவ்வளவினுள் இயங்குகின்றது.

தேசிய வடிவமைப்பு நிலையம் தனது நோக்கை முன்னிலைப்படுத்தி செயற்படுத்தும் பணித்திட்டத்தின் மூலம் தனது குறிக்கோள்களை அடைவதற்காக பிரதான காரியாலயத்தின் தலைமைத்துவம் மற்றும் நத்தரம்பொத்தை கருத்திட்டக் காரியாலயத்தின் ஒத்துழைப்புடன் செயற்றிட்டத்திற்குரிய நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஏனைய சகோதர நிறுனங்கள் போன்றே மாகாண சபைகள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பு இந்நிறுவனத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்ற தொடர்ந்து கிடைப்பதோடு, இத்துறையில் இணைந்துள்ள தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், கைவினைத் திறன் கலைஞர்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மேற்குறிப்படப்பட்டுள்ள குறிக்கோள்களை அடைவதற்காக தொடர்ந்து இந்நிறுவனத்துடன் தங்களது தொடர்புகளைப் பேணி வருகின்றனர்.

சகல நிர்வாக. நிதி, விற்பனை அபிவிருத்தி நடவடிக்கைகள், வடிவமைப்பு அபிவிருத்தி, வடிவமைப்பு கல்வி, தொழிநுட்ப அபிவிருத்தி போன்றே ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆகிய துறைகளுக்குரிய நடவடிக்கைகளும் பொது வசதிகளை வழங்கல் மற்றும் நூலக சேவைகளை வழங்கல் ஆகிய நிறுவனத்தின் பிரதான குறிக்கோள்களை அடைவதற்கான சகல நடவடிக்கைகளும் பிரதான காரியாலயத்தினால் மேற்கொள்ளப்படுவதோடு, நிர்வாகம், நிதி மற்றும் விற்பனை மேம்பாட்டு நடவடிக்கைகள் நீங்கலாக ஏனைய சகல நடவடிக்கைகளும் நத்தரம்பொத்தை காரயாலயத்தின் மூலமும் நடைபெறுகின்றன.

1. பிரதான காரியாலயம் :
   இல.10, டி மெல் வீதி, கட்டபெத்தை, மொரட்டுவை

   தொலைபேசி : 011-2607114 - தலைவர்

   தொலைபேசி/தொலைநகல் இல : 011-2626345 - பணிப்பாளர்

   தொலைபேசி : 011-2607814 - பொது

   தொலைநகல் : 011-2607111

   மின்னஞ்சல் : slndcrisep@yahoo.com

11. நத்தரம்பொத்தை கருத்திட்ட காரியாலயம் : கலாபுரய, நத்தரம்பொத்தை

    பொது வசதிகள் நிலையம் மற்றும் வேலைதளம்

    தொலைபேசி/தொலைநகல் இல : 081-2420038

# நிறுவன முகாமைத்துவம்

**பணிப்பாளர் சபை**

திரு.டி.டப்ளியு.மார்ஷல் ஜனதா

தலைவர் - தேசிய வடிவமைப்பு நிலையம்

திரு.புத்தி கீர்த்திசேன

திரு.எஸ்.ஸ்ரீ சந்திரன்

திருமதி.அனோமா லாபீர்

செல்வி.ஷெரீன்ஷேவியர்

திருமதி.சுஜாத்தா வீரக்கோன்

திருமதி.என்.கொடகந்த

திரு.அனில் கொஸ்வத்த

திருமதி.ஜெகராஜசிங்கம்

## சிரேட்ட முகாமைத்துவம்

டி.டப்ளியு.மார்ஷல் ஜனத்தா
தலைவர் - தேசிய வடிவமைப்பு நிலையம்

திரு.எம்.ஏ.எஸ்.கே.சந்திரசிரி
பணிப்பாளர் - தேசிய வடிவமைப்பு நிலையம்


திரு.ஜே.ஏ.ஏ.ஆர்.சி.குணரத்ன
தொழிநுட்ப அபிவிருத்தி பொறியியலாளர்

திரு.ஏ.ஏ.காமினி
உதவி பணிப்பாளர் (வடிவமைப்புகல்விமற்றும் பயிற்சி)

திரு.கே.எம்.பி.எஸ்.அஸித்த குஸலதர்ம
உதவி பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி)
(2012/04/05ம் திகதி வரை)

திரு.பி.கே.விஜேசிங்ஹ
உதவி பணிப்பாளர் (நத்தரம்பொத்த)

திருமதி.பத்ராணி ரணவீர
கணக்காளர்


நிறுவன அமைப்பு
தலைவர்
HM 1-3.......
பணிப்பாளர்
MM 1-1 .......
பி.ப/உ.ப.(நிர்வாகம்)
பி.ப.(வடிவமைப்பு அபிவிருத்தி)
பி.ப.(வடிவமைப்பு, கல்வி மற்றும் பயிற்சி)
MM 1-1 .......
கணக்காளர்
உ.ப. (வடிவமைப்பு அபிவிருத்தி)
உ.ப.ஆராய்ச்சி (இராசாயனம்)
உ.ப.ஆராய்ச்சி (விற்பனை)
உ.ப.ஆராய்ச்சி (இயந்திரம்)
JM 1-1 .......
நிர்வாக அதிகாரி
கணக்கு அதிகாரி
சிரேட்ட வடிவமைப்பாளர்
உள்ளக கணக்காய்வாளர்
வேலைதிட்ட இணைப்பதிகாரி
MA 5-1 .......
வடிவமைப்பாளர்
MA 3 .......
அபிவிருத்தி உதவியாளர்
அபிவிருத்தி உதவியாளர்
விற்பனை உதவியாளர்
நூலக/தகவல் உதவியாளர்
பிரத்தியேக உதவியாளர்
MM 2-1.......
பிரத்தியேக உதவியாளர்
MM 1-1.......
முகாமைத்துவ உதவியாளர்
முகாமைத்துவ உதவியாளர்
தொழிற் போதனாசிரியர்
முகாமைத்துவ உதவியாளர்
முகாமைத்துவ உதவியாளர்
பிரத்தியேக உதவியாளர்
PL 3............
சாரதி
PL 1............
அலுவலக உதவியாளர்/காவற்காரர்

# மனித வளம்

**மதியுரை மற்றும் பூரண மேற்பார்வை**

| தலைவர் | | |
|---|---|---|
| **பதவி** | அங்கீகரிக்கப்பட்ட | தற்போதைய |
| பணிப்பாளர் | 01 | 01 |

**செயற்படுத்துகை**

| **பதவி** | அங்கீகரிக்கப்பட்ட | தற்போதைய | வெற்றிடம் |
|---|---|---|---|
| பிரதி பணிப்பாளர் | 02 | -- | 02 |
| பிரதி பணிப்பாளர்/உதவி பணிப்பாளர் (நிர்வாகம்) | 01 | -- | 01 |
| உதவி பணிப்பாளர் ஆராய்ச்சி (இயந்திரம்) | 01 | -- | 01 |
| உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) | 01 | -- | 01 |
| உதவி பணிப்பாளர் (ஆராய்ச்சி) விற்பனை | 01 | -- | 01 |
| உதவி பணிப்பாளர் (ஆராய்ச்சி) இரசாயனம் | 01 | -- | 01 |

**அபிவிருத்தி நடவடிக்கைகளில் நேரடியாக சம்பந்தப்படுபவர்கள்**


| **பதவி** | அங்கீகரிக்கப்பட்ட | தற்போதைய | வெற்றிடம் |
|---|---|---|---|
| சிரேட்ட வடிவமைப்பு உருவாக்குனர் | 04 | 05 | |
| வடிவமைப்பு உருவாக்குனர் | 09 | 08 | 01 |
| விற்பனை உதவியாளர் | 01 | 01 | |
| கைத்தொழில் போதனாசிரியர் | 32 | 15 | 17 |
| பயிற்சி உதவியாளர் | – | 03 | |

**அபிவிருத்தி நடவடிக்கைகளில் மறைமுகமாக சம்பந்தப்படுபவர்கள்**

| **பதவி** | அங்கீகரிக்கப்பட்ட | தற்போதைய | வெற்றிடம் |
|---|---|---|---|
| கைத்தொழில் அபிவிருத்தி பொறியியலாளர் | -- | 01 | |
| உதவி பணிப்பாளர் | -- | 02 | |
| கணக்காளர் | 01 | 01 | |
| நிர்வாக அதிகாரி | 01 | 01 | |
| உள்ளக கணக்காய்வாளர் | 01 | -- | 01 |
| கணக்கதிகாரி | 01 | 01 | -- |
| வேலைதிட்ட இணைப்பதிகாரி | 01 | -- | 01 |
| அபிவிருத்தி உதவியாளர் | 03 | 03 | |
| நூலக/தகவல் உதவியாளர் | 01 | -- | 01 |
| பிரத்தியேக உதவியாளர் | 02 | 02 | |
| முகாமைத்துவ உதவியாளர் | 10 | 13 | |

| **பதவி** | அங்கீகரிக்கப்பட்ட | தற்போதைய | வெற்றிடம் |
|---|---|---|---|
| சாரதி | 06 | 04 | 02 |
| அலுவலக உதவியாளர் | 17 | 08 | 09 |
| காவலாளி | 04 | 07 | |


## அமைப்பு ரீதியான பதவிகள




## நிதிச் செயற்பாடுகள்

தேசிய வடிவமைப்பு நிலையம் ஒரு சேவை வழங்கும் நிறுவனமாகும். இது ஒரு நியதிச் சபையாக செயற்படுவதோடு, தேவையான நிதி ஒதுக்கீடுகள் திறைசேரியால் வழங்கப்படுகின்றன.

2012ம் அண்டிற்குரிய அங்கீகரிக்கப்பட்ட பாதீடு மற்றும் திறைசேரியால் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள் பற்றிய தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.




திறைசேரியால் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக, தேசிய வடிவமைப்பு நிலையம் நிறைவேற்றும் சேவைகள், விசேடமாக மதியுரை சேவைகளுக்காக அறவிடப்படும் கட்டணங்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரனையின் கீழ் நடைபெறும் புத்தாக்க அபிவிருத்தி மற்றும் பயிற்சி வேலைதிட்டங்கள், கருத்திட்டங்களுக்காக கிடைக்கும் ஒதுக்கீடுகள் ஆகியவைகளுடன் வடிவமைப்பு டிப்ளோமா பாடநெறிகளுக்காக அறவிடப்படும் கட்டணங்கள் மூலம் நிதியத்திற்கு பணம் கிடைக்கின்றது. அதன்படி, தேசிய வடிவமைப்பு நிலையம் பின்வரும் நிதியங்களை செயற்படுத்துகிறது.

| | | |
|---|---|---|
| (1) | தேசிய வடிவமைப்பு நிலைய நிதியம் | (NDC) |
| (2) | ஊழியர் கடன் நிதியம் | (SLC) |
| (3) | வடிவமைப்பு மதியுரை சேவைகள் நிதியம் | (DCF) |
| (4) | விற்பனை ஆராய்ச்சி நிதியம் | (TMF) |
| (5) | வடிவமைப்பு கல்வி மற்றும் பயற்சி நிதியம் | (DET) |

## அபிவிருத்தி செயற்பாடுகள்

### 01. புத்தாக்கத்தை திட்டமிடுதல் மற்றும் அபிவிருத்தி


தேசிய வடிவமைப்பு நிலையத்தின் பொறுப்புகளில் முக்கிய செயற்பாடொன்றென அறிமுகப்படுத்தக் கூடிய புத்தாக்கங்களை திட்டமிடுதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் மூலமாக தேசிய சந்தையைப் போன்றே சர்வதேச சந்தையின் தற்போதைய தேவைக்கு பொருத்தமான, கேள்வியை உருவாக்கக் கூடிய புத்தக்கங்களை உற்பத்தி செய்து, அப்புத்தாக்கங்களை கைவினைக் கைத்தொழிலாளர்களுக்கு அறிமுகப்படுததுவதன் வாயிலாக அவர்களை பொருளாதார ரீதியாக வலுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தேசிய மூலப் பொருட்களின் பெறுமதி அதிகரிப்பு வீதத்தை உயர்த்துவதற்கு புத்தாக்க அபிவிருத்தி உந்துகோலாக அமைந்துள்ளது. ஆதலால், பாரம்பரிய உற்பத்திகளுக்கு அப்பால் சென்று நவீன சந்தைக்கு உள்ளிட கைவினைக் கைத்தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியாக வழகாட்டல் வழங்க தேசிய வடிவமைப்பு நிலையம் நடவடிக்கைககளை மேற்கொள்கின்றது.

கைவினைக் கைத்தொழில் துறையை உள்ளடக்கிய சகல துறைகளுக்காகவும் நவீன வடிவமைப்புக்களை வடிவமைக்கும் நடவடிக்கைகளை தேசிய வடிவமைப்பு நிலையம் மேற்கொள்வதோடு, அவைகளில் நாணற் புல் மற்றும் நார், செங்களி, தும்பு, மூங்கிள் மற்றும் பிரம்பு, புடைவை, மரப் பொருட்கள், லாக்ஸா, பித்தளை, தோல் மற்றும் ஆபரணங்கள் ஆகிய துறைகள் பிரதான இடத்தை வகிக்கின்றன.

தற்போதுள்ள படைப்பொன்றை இன்றைய சந்தைக்கு அல்லது சமூகத்திற்கு பொருந்தக் கூடியவாறு தேவையான மாற்றங்களை ஏற்படுத்தி வடிவமைத்தல், படைப்பாளியின் எண்ணத்தில் தோன்றக் கூடிய புதிய எண்ணக்கருவொன்றை ஏற்றுக் கொள்ளப்பட்ட விழுமியங்களின் மீது கவனத்தைச் செலுத்தி உருவாக்குவதைப் போன்றே நிலையத்திலிருந்து சேவைகளை எதிர்ப்பார்ப்பவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி அவர்களது தேவைகளுக்கேற்ப புதிய வடிவமைப்புக்களை வடிவமைக்கும் நடவடிக்கைகளை தேசிய வடிவமைப்பு நிலையம் செயற்படுத்துகிறது. இதற்கு மேலதிகமாக, அரசின் கவனத்தை ஈர்த்துள்ள நினைவுச் சின்ன மற்றும் பரிசுப் பொருட்களை கைவினைக் கைத்தொழில் துறையின் வாயிலாக புத்தாக்கங்களாக வெளியிடும் நடவடிக்கைகளில் தேசிய வடிவமைப்பு நிலையம் பொறுப்புடன் செயற்படுகிறது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றும் நோக்குடன் தேசிய மற்றும் வெளிநாட்டு சந்தைகளை இலக்குப்படுத்தி உற்பத்தி செயற்கிரமங்களில் ஈடுபடும் கைவினைக் கைத்தொழிலாளர்கள் மற்றும் சிறு கைத்தொழிலாளர்கள் ஆகியோர்களை கருத்திற் கொண்டு தற்போதைய சந்தைக்குப் பொருந்தக் கூடிய, நுகர்வோரின் தேவையை இலக்குப்படுத்திய புதிய வடிவமைப்புக்களை திட்டமிடுதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ஆகிய நடவடிக்கைகள் 2012ம் ஆண்டில் பின்வருமாறு நிறைவேற்றப்பட்டுள்ளன.



## 2. புத்தாக்கங்களை மாதிரிகளாக மாற்றுதல்


புத்தாக்க எண்ணக்கருக்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட படைப்புகளை மொரட்டுவை மற்றும் நத்தரம்பொத்தை வளாகத்தினுள் அமைந்துள்ள வேலைதளங்களில் மாதிரிகளாக அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு, வேலைதளத்தில் உற்பத்தி செய்ய முடியாத படைப்புக்களை வெளிக் கலைஞர்கள் மூலம் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்படி, வேலைதளத்தில் 338 புத்தாக்கங்களையும் மற்றும் வெளிக் கலைஞர்கள் மூலம் 25 புத்தாக்கங்களையும் உற்பத்தி செய்வதற்கான வருட இலக்கை எட்டும் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. பித்தளை, லாக்ஸா மற்றும் தோற் சார்ந்த 120 புத்தாக்கங்கள் நத்தரம்பொத்தை வேலைதளத்தில் உற்பத்தி செய்யப்பட்டதோடு, நாணற் புல் மற்றும் நார், செங்களி, தும்பு, மூங்கில் மற்றும் பிரம்பு, புடைவை, மரப் பொருட்கள் ஆகிய துறைகளை பிரதானமாகக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட 230 புத்தாக்கங்கள் மொரட்டுவை வேலைதளத்தில் மாதிரிகளாக மாற்றப்பட்டன.

அதன்படி 2012ம் ஆண்டில் 352 உற்பத்திகள் வேலைதளத்திலும் 28 உற்பத்திகள் வெளிக் கலைஞர்கள் மூலமும் அபிவிருத்தி செய்யப்பட்டு மொத்தமாக 380 மாதிரிகளை கைவினைக் கைத்தொழிற் துறைக்காக வெளியிட இயலுமானது.

கருத்திட்டங்கள் வாயிலாக நிறுவனத்தின் மூலம் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி வேலைதிட்டங்கள் மற்றும் மாகாண சபைகள், ஏற்றுமதி அபிவிருத்தி சபை, தேசிய அருங்கலைகள் பேரவை, மற்றும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் வாயிலாக செயற்படுத்தப்படும் கைத்தொழில் பயிற்சி வேலைதிட்டங்களில் இம்மாதிரிகளை கலைஞர்களுக்கு அறிமுகப்படுத்தி, அவர்களை இப்புத்தாக்க உற்பத்திகளில் ஈடுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு, புத்தாக்க கண்காட்சிகள் மற்றும் விற்பனை சந்தைகள் மூலமும் கணிசமான மாதிரிகளை தேசிய வடிவமைப்பு நிலையத்திற்கு சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வருகை தரும் கலைஞர்கள் மூலமாகவும், மாகாண சபைகள், ஏற்றுமதி அபிவிருத்தி சபை, தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் வாயிலாக செயற்படுத்தப்படும் கைவினைக் கைத்தொழில் பயிற்சி வேலைதிட்டங்கள் மூலமும், புத்தாக்க கண்காட்சிகள் மற்றும் விற்பனை சந்தைகள் மூலமும் மற்றும் இலங்கை கைப்பணிச் சபை வாயிலாகவும் சந்தைக்கு அறிமுகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.




புதிய வடிவமைப்பு மாதிரிகள்



## கைவினைக் கைத்தொழிற் புத்தாக்கங்கள் வாயிலாக நினைவுச் சின்னங்களை வெளியிடுதல்

படைப்புகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் புத்தாக்க வடிமைப்புகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் கைவினைக் கைத்தொழில் துறையை மிகவும் உயிரோட்டமுள்ள துறையாக மாற்றுதல் எனும் குறிக்கோள் மற்றும் மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு எனும் தேசிய அபிவிருத்தி வேலைதிட்டத்தின் கீழ் தேசிய வடிவமைப்பு நிலையம் கைவினைக் கைத்தொழில் துறையில் உயிரோட்டமுள்ள செயற்பாடொன்றை காட்டி நிற்கின்றது.


தேசிய உல்லாசப் பிரயாணத் துறையின் துரித அபிவிருத்தியுடன் இந்நாட்டிற்கு வருகை தரும் உல்லாசப் பிரயாணிகளின் தொகை கணிசமான அளவு உயர்ந்திருப்பதால், இந்நிலை தேசிய கைவினைக் கலைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த எவ்வாறு உதவும் என கவனம் செலுத்தும்போது, நினைவுச் சின்னங்கள் மற்றும் பரிசுப் பொருட்களின் உற்பத்தி பிரதான இடத்தை வகிக்கின்றன. ஆதலால், தேசிய அடையாளத்தை உருவகப்படுத்தும் நினைவுச் சின்னங்கள் மற்றும் பரிசுப் பொருட்களின் மீது கவனத்தை செலுத்தி புத்தாக்கங்களை வெளியிடவும் அப்புத்தாக்கங்களை கைவினைக் கலைஞர்களுக்கு அறிமுகப்படுத்தவும் தேசிய வடிவமைப்பு நிலையம் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்நடவடிக்கைகள் மூலமாக இலக்குப்படுத்தப்பட்ட 22 நினைவுச் சின்னங்கள் மற்றும் பரிசுப் பொருட்களுக்காக பாராளுமன்றம், அனுராதபுரம், தலதா மாளிகை, தேசிய யானையின் பல்வேறு தோற்றங்கள் போன்ற தேசிய பெறுமதி வாய்ந்த இலக்குப்படுத்தப்பட்ட 23 நினைவுச் சின்னங்களை உற்பத்தி செய்வதற்குரிய நடவடிக்கைகளை தேசிய வடிவமைப்பு நிலையம் மேற்கொண்டது.

### புத்தாக்க அபிவிருத்தி வேலைதிட்டம்

தேசிய வடிவமைப்பு நிலையம், சந்தை வாய்ப்பை தொடர்ச்சியாக ஆய்வு செய்து சந்தைக்குப் பொருத்தமானதைப் போன்றே சந்தைக் கேள்வியொன்றை ஏற்படுத்தக் கூடிய புத்தாக்கங்களை உருவாக்கி அவைகளை கைவினைக் கலைஞர்கள் வாயிலாக சந்தைப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு வேலைதிட்டத்தின் மூலம் கைவினைக் கைத்தொழில் துறைக்கு வழங்கவேண்டிய பணியைப் பற்றிய சிறந்த தெளிவுடன் தேசிய வடிவமைப்பு நிலையத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதேபோன்று வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி வேலைதிட்டம் வேலை செய்யும் மக்களுக்கு விளைவு தரக் கூடிய வழியொன்றை திறந்து விடுவதற்காக நிதிப் பங்களிப்கை வழங்குவதோடு, நாடு பூராவையும் உள்ளடக்கி பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள பாரிய அபிவிருத்தி திட்டமாக இது அமைந்துள்ளது. இதற்கு மேலதிகமாக கைவினைக் கைத்தொழிலின் அபிவிருத்திக்காக அரம்பிக்கப்பட்ட பாரம்பரிய கைவினைக் கைத்தொழில் கிராம அபிவிருத்தி வேலைதிட்டமும் இவ்வாண்டில் ஆரம்பிக்கப்பட்ட சிறந்த விளைவை அளிக்கக் கூடிய கருத்திட்டமொன்றாகும்.

இவ்வனைத்து அபிவிருத்தி திட்டங்களுக்கும் பங்களிப்பை வழங்கும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டல் மற்றும் மதியுரையின் கீழ் பல்வேறு பிரதேசங்களை உள்ளடக்கி கீழ் குறிப்பிட்டுள்ளவாறு புத்தாக்கங்கள் பற்றிய அறிவூட்டல் மற்றும் அபிவிருத்தி பயிற்சி வேலைதிட்டங்களை செயற்படுத்த தேசிய வடிவமைப்பு நிலையத்திற்கு இயலுமானது.



## 2012ம் ஆண்டினுள் நடாத்தப்பட்ட புத்தாக்க அபிவிருத்தி வேலைதிட்டங்கள்

| **வேலைதிட்டத்தின் தன்மையும் கைவினைக் கைத்தொழிற் துறையும்** | **நடாத்தப்பட்ட இடங்கள்** | **ஆரம்பிக்கப்பட்ட திகதியும் நடைபெற்ற நாட்களும்** | **இணைப்பு நிறுவனம்** | **பயனாளிகளின் எண்ணிக்கை** | **அறிமுகப்படுத்திய புத்தாக்கங்களின் எண்ணிக்கை** | **பொறுப்பதிகாரி** |
|---|---|---|---|---|---|---|
| அடிப்படை பயிற்சி வேலைதிட்டம் - தும்பு சார்ந்த | தேசிய வடிவமைப்பு நிலையம் - கட்டுபெத்தை | ஜனவரி 24 03 நாட்கள் | | 12 | 6 | திரு.சன்ன நதீஜ பெரேரா வடிவமைப்பு அபிவிருத்தி அதிகாரி |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - தோற் சார்ந்த | தேசிய வடிவமைப்பு - நிலையம் நத்தரம்பொத்தை | பெப்ரவரி 16 - 10 நாட்கள் | தேசிய வடிவமைப்பு நிலையம் - நத்தரம்பொத்தை | 13 | 4 | திரு.பி.கே.விஜேசிங்ஹ உதவி பணிப்பாளர் (நத்தரம்பொத்தை) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் **–வாழ்வின் எழுச்சி–மரப்பொருட்கள்** | அனுராதபுரம் - பிரதேச செயலகம் | பெப்ரவரி 09 - 02 நாட்கள் | அனுராதபுரம் - பிரதேச செயலகம் | 20 | 13 | திரு.பர்ணாட் மனதுங்க உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் **–வாழ்வின் எழுச்சி–மரப்பொருட்கள்** | மெனராகல - பிரதேச செயலகம் | பெப்ரவரி 09 - 02 நாட்கள் | மெனராகல - பிரதேச செயலகம | 11 | 19 | திரு.பர்ணாட் மனதுங்க உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - செங்களி | செங்களி பயிற்சி நிலையம் - அளவ்வை - வலகும்புர - குருநாகல் | பெப்ரவரி 20 - 03 நாட்கள் | சிறு கைத்தொழில் திணைக்களம் - தென்மேற்கு மாகாணம் | 30 | 12 | திரு.விஜித்த பண்டார உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - திரைச்சீலை | தேசிய வடிவமைப்பு நிலையம் - நத்தரம்பொத்தை | மார்ச் 05 - 04 நாட்கள் | தேசிய வடிவமைப்பு நிலையம் - நத்தரம்பொத்தை | 19 | 8 | திரு.பி.கே.விஜேசிங்ஹ உதவி பணிப்பாளர் (நத்தரம்பொத்தை) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் **–வாழ்வின் எழுச்சி–மரப்பொருட்கள்** | யாழ் பிரதேச செயலகம் | மார்ச் 03 - 02 நாட்கள் | யாழ் பிரதேச செயலகம் | 80 | 79 | திரு.பர்ணாட் மனதுங்க உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் **–வாழ்வின் எழுச்சி–மரப்பொருட்கள்** | அத்தனகல்ல பிரதேச செயலகம் - கம்பஹா | மார்ச் 19 - 02 நாட்கள் | அத்தனகல்ல பிரதேச செயலகம் | 15 | 28 | திரு.பர்ணாட் மனதுங்க உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - தும்பு | தேசிய வடிவமைப்பு நிலையம் - கட்டுபெத்தை | மார்ச் 14 - 03 நாட்கள் | தேசிய வடிவமைப்பு நிலையம் | 11 | 5 | திரு.சன்ன நதீஜ பெரேரா வடிவமைப்பு அபிவிருத்தி அதிகாரி |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் **–வாழ்வின் எழுச்சி–நாணற் புல் மற்றும் நார்** | மரப் பொருட்கள் பயிற்சி நிலையம் | மார்ச் 29 - 02 நாட்கள் | தேசிய வடிவமைப்பு நிலையம் | 07 | 4 | திருமதி.சோமலதா கம்லத் உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் **–வாழ்வின் எழுச்சி– புடைவை** | மரப் பொருட்கள் பயிற்சி நிலையம் | மார்ச் 29 - 02 நாட்கள் | தேசிய வடிவமைப்பு நிலையம் | 08 | 4 | திருமதி. தமரா தமயந்தி உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - ஆபரணம் | இலங்கை மன்றக் கல்லூரி | மார்ச் 30 - 01 நாள் | தென்னை அபிவிருத்தி சபை | 44 | | திருமதி.துஸினி விஜேரத்ன வடிவமைப்பு அபிவிருத்தி அதிகாரி |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் **–வாழ்வின் எழுச்சி–மரப்பொருட்கள்** | கம்பஹா பிரதேச செயலகம் | ஏப்ரில் 23 02 நாட்கள் | கம்பஹா பிரதேச செயலகம் | 7 | 12 | திரு.பர்ணாட் மனதுங்க உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி |

| வேலைதிட்டத்தின் தன்மையும் கைவினைக் கைத்தொழிற் துறையும் | நடாத்தப்பட்ட இடங்கள் | ஆரம்பிக்கப்பட்ட திகதியும் நடைபெற்ற நாட்களும் | இணைப்பு நிறுவனம் | பயனாளிகளின் எண்ணிக்கை | அறிமுகப்படுத்திய புத்தாக்கங்களின் எண்ணிக்கை | பொறுப்பதிகாரி |
|---|---|---|---|---|---|---|
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - மூங்கிள் மற்றும் பிரம்பு | விதாத்தா மாதம்பை - சிலாபம் | ஏப்ரில் 25 03 நாட்கள் | விதாத்தா மாதம்பை - சிலாபம் | 25 | 10 | திரு.டபிள்யு.எம் பியரத்ன உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| தொழிநுட்ப பயிற்சி வேலைதிட்டம் - தும்பு சார்ந்த | தேசிய வடிவமைப்பு நிலையம் - கட்டுபெத்தை | மே 14 - 03 நாட்கள் | | 12 | 4 | திரு.சன்ன நதீஜ பெரேரா வடிவமைப்பு அபிவிருத்தி அதிகாரி |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் **–வாழ்வின் எழுச்சி–** மரப்பொருட்கள்/ புடைவை | இரத்தினபுரி பிரதேச செயலகம் | மே 23, ஜூன் 13 - 03 நாட்கள் | இரத்தினபுரி பிரதேச செயலகம் | 37 | | திருமதி. தமரா தமயந்தி உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - செங்களி | கோட்டாபயபுர திஸ்ஸமஹாராம | மே 29, 01 நாள் | அபிவிருத்தி நிதியம் - ஹம்பாந்தோட்டை | 80 | 4 | திரு.விஜித்த பண்டார உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - செங்களி | பன்சலகொடெல்ல பெலியத்தை | மே 22 - 01 நாள் | அபிவிருத்தி நதியம் - ஹம்பாந்தோட்டை | 61 | 4 | திரு.விஜித்த பண்டார உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - மூங்கிள் மற்றும் பிரம்பு | பெலியத்தை - ஹம்பாந்தோட்டை | மே 22 - 01 | | 20 | 13 | திருமதி.சோமலதா கம்லத் உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - **வாழ்வின் எழுச்சி** மரப் பொருட்கள் | கண்டி | மே 05- 02 நாட்கள் | | 18 | 17 | திரு.பர்ணாட் மனதுங்க உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - மூங்கிள் மற்றும் பிரம்பு | அங்குனகொள பெளஸ்ஸ பிரதேச செயலகம் - ஹம்பாந்தோட்டை | மே 29- 04 நாட்கள் | அங்குனகொள பெளஸ்ஸ பிரதேச செயலகம் | 15 | 6 | திரு.டபிள்யு.எம்.பியரத்ன உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - மரப் பொருட்கள் | இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை - கேகாலை | ஜூன் 13- 02 நாட்கள் | இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை - கேகாலை | 20 | 14 | திரு.பர்ணாட் மனதுங்க உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க மற்றும் தொழிநுட்ப வேலைதிட்டம் - புடைவை பத்திக் | தேசிய வடிவமைப்பு - நிலையம் நத்தரம்பொத்த | ஜூன் 06- 10 நாட்கள் | தேசிய வடிவமைப்பு - நிலையம் நத்தரம்பொத்தை | 15 | 10 | திரு.பி.கே.விஜேசிங்ஹ உதவி பணிப்பாளர் (நத்தரம்பொத்தை) |
| நவீன தொழிநுட்ப பயிற்சி வேலைதிட்டம் - பித்தளை | தேசிய வடிவமைப்பு - நிலையம் நத்தரம்பொத்த | ஜூன் 18 - 02 நாட்கள் | தொழில் அபிவிருத்தி சங்கம் - கலாபுரய | 15 | | திரு.டொரீன் சந்திரசேகர - வடிவமைப்பு அபிவிருத்தி அதிகாரி |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - **வாழ்வின் எழுச்சி** மரப் பொருட்கள் | பிரதேச செயலகம் - மன்னார் | ஜூன் 26 - 02 நாட்கள் | தேசிய வடிவமைப்பு - நிலையம் | 37 | | திரு.பர்ணாட் மனதுங்க உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - நாணற் புல் மற்றும் நார் | பெந்தோட்டை பிரதேச செயலகம் - காலி | ஜூன் 26 - 02 நாட்கள் | அபிவிருத்தி அதிகார சபை- தென் மாகாணம் | 20 | 10 | திருமதி.சோமலதா கம்லத் உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |

| வேலைதிட்டத்தின் தன்மையும் கைவினைக் கைத்தொழிற் துறையும் | நடாத்தப்பட்ட இடங்கள் | ஆரம்பிக்கப்பட்ட திகதியும் நடைபெற்ற நாட்களும் | இணைப்பு நிறுவனம் | பயனாளிகளின் எண்ணிக்கை | அறிமுகப்படுத்திய புத்தாக்கங்களின் எண்ணிக்கை | பொறுப்பதிகாரி |
|---|---|---|---|---|---|---|
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - புடைவை சார்ந்த பைகள் | தேசிய வடிவமைப்பு நிலையம் | ஜூன் 21 - 02 நாட்கள் | தேசிய வடிவமைப்பு நிலையம் | 08 | 02 | திருமதி. தமரா தமயந்தி உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - புடைவை சார்ந்த பத்திக் | தேசிய வடிவமைப்பு நிலையம் | ஜூன் 21 - 02 நாட்கள் | தேசிய வடிவமைப்பு நிலையம் | 07 | 08 | திருமதி. தமரா தமயந்தி உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க மற்றும் நவீன தொழிநுட்ப அறிமுகப் பயிற்சி வேலைதிட்டம் - செங்களி | தங்வெல்ல பயிற்சி நிலையம் - குருநாகல் | ஜூன் 27 - 03 நாட்கள் | கைத்தொழில் திணைக்களம் - தென்மேல் மாகாணம் | 50 | 04 | திரு.விஜித்த பண்டார உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - செங்களி | உதாரகம, மாவத்தகம, குருநாகல் | ஜூன் 24 - 02 நாட்கள் | தென்மேல் மாகாண கைத்தொழில் திணைக்களம் | 26 | 6 | திரு.விஜித்த பண்டார உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - புடைவை | வெலிகம மாத்தறை | ஜூன் 04 - | தேசிய வடிவமைப்பு நிலையம் | 20 | 1 | திருமதி. தமரா தமயந்தி உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - புடைவை - பைகள் | அனுராதபுரம் | ஜூலை 17 - 02 நாட்கள் | தேசிய வடிவமைப்பு நிலையம் | 19 | 3 | திருமதி. தமரா தமயந்தி உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - புடைவை - பைகள் | நத்தரம்பொத்தை கண்டி | ஜூலை 30 - 02 நாட்கள் | தேசிய வடிவமைப்பு நிலையம் | 17 | 4 | திருமதி. தமரா தமயந்தி உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - **வாழ்வின் எழுச்சி** மரப் பொருட்கள் | ஹம்பாந்தோட்டை பிரதேச செயலகம் | | ஹம்பாந்தோட்டை பிரதேச செயலகம் | 49 | 27 | திரு.பர்ணாட் மனதுங்க உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி)) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - தோற் சார்ந்த | மாத்தளை பிரதேச செயலகம் | ஜூலை 23 - 05 நாட்கள் | தேசிய வடிவமைப்பு நிலையம் - நத்தரம்பொத்த | 10 | 6 | திரு.பி.கே.விஜேசிங்ஹ உதவி பணிப்பாளர் (நத்தரம்பொத்தை) |
| அறிவூட்டல் வேலைதிட்டம் - மூங்கிள் மற்றும் பிரம்பு | குருவிட்ட இரத்தினபுரி | ஜூலை 09 | தேசிய அருங்கலைகள் பேரவை | 12 | | திரு.டபிள்யு.எம் பியரத்ன உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| அறிவூட்டல் வேலைதிட்டம் - **வாழ்வின் எழுச்சி** | கண்டி | ஜூலை | | 28 | | திரு.பி.கே.விஜேசிங்ஹ உதவி பணிப்பாளர் (நத்தரம்பொத்தை) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - நாணற் புல் மற்றும் நார் சார்ந்த | கிரிந்தகம ஹம்பாந்தோட்டை | ஆகஸ்ட் - 13 05 நாட்கள் | | 10 | 10 | திருமதி.சோமலதா கம்லத் உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| அறிவூட்டல் வேலைதிட்டம் - மூங்கிள் மற்றும் பிரம்பு | அக்மீமன காலி | ஆகஸ்ட் - 17 | | 24 | | திரு.டபிள்யு.எம் பியரத்ன உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |

| வேலைதிட்டத்தின் தன்மையும் கைவினைக் கைத்தொழிற் துறையும் | நடாத்தப்பட்ட இடங்கள் | ஆரம்பிக்கப்பட்ட திகதியும் நடைபெற்ற நாட்களும் | இணைப்பு நிறுவனம் | பயனாளிகளின் எண்ணிக்கை | அறிமுகப்படுத்திய புத்தாக்கங்களின் எண்ணிக்கை | பொறுப்பதிகாரி |
|---|---|---|---|---|---|---|
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - மூங்கிள் மற்றும் பிரம்பு | அய்வெல - மொனராகல | ஆகஸ்ட் 25<br>03 நாட்கள் | | 20 | 3 | திரு.டபிள்யு.எம் பியரத்ன உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - புடைவை - பீரளு | சிப்னாரா- காலி | ஆகஸ்ட் 23<br>02 நாட்கள் | | 22 | 4 | திருமதி. தமரா தமயந்தி உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - **வாழ்வின்** எழுச்சி மரப் பொருட்கள் | பதுளை மாவட்ட செயலகம் | செப்டம்பர் 07<br>02 நாட்கள் | பதுளை பிரதேச செயலகம் | 46 | 20 | திரு.பர்ணாட் மனதுங்க உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - **வாழ்வின்** எழுச்சி மரப் பொருட்கள் | மாத்தளை | செப்டம்பர் 20<br>02 நாட்கள் | மாத்தளை பிரதேச செயலகம் | 35 | 20 | திரு.பி.கே.விஜேசிங்ஹ உதவி பணிப்பாளர் (நத்தரம்பொத்தை) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - தென்மேல் மாகாணம் TOT - புடைவை | அம்பாறை - கைத்தொழில் திணைக்களம் | செப்டம்பர் 12<br>02 நாட்கள் | அம்பாறை கைத்தொழில் திணைக்களம் | 21 | 4 | திருமதி. தமரா தமயந்தி உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - புடைவைசார்ந்த அலங்காரப் பொருட்கள் | மெனிக்ஹின்ன கண்டி | செப்டம்பர் 17<br>05 நாட்கள் | தேசிய வடிவமைப்பு நிலையம் - நத்தரம்பொத்த | 15 | 6 | திரு.பி.கே.விஜேசிங்ஹ உதவி பணிப்பாளர் (நத்தரம்பொத்தை) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - புடைவை ரெக்ஸின் பைகள் | கைத்தொழில் அபிவிருத்தி சபை மத்திய மாகாணம் | 10 நாட்கள் | கைத்தொழில் அபிவிருத்தி சபை மத்திய மாகாணம் | 20 | | திரு.பி.கே.விஜேசிங்ஹ உதவி பணிப்பாளர் (நத்தரம்பொத்தை) |
| அறிவூட்டல் வேலைதிட்டம் - கைவினைக் கைத்தொழில் | தேசிய வடிவமைப்பு நிலையம் | செப்டம்பர் 14 | தேசிய அருங்கலைகள் பேரவை | 7 | | திரு.பி.கே.விஜேசிங்ஹ உதவி பணிப்பாளர் (நத்தரம்பொத்தை) |
| அறிவூட்டல் வேலைதிட்டம் - மூங்கிள் சார்ந்த | மத்திய மாகாண ஆளுனரின் காரியாலயம் | செப்டம்பர் 18 | மத்திய மாகாண கைத்தொழில் அமைச்சு | 75 | | திருமதி.சோமலதா கம்லத் உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| அறிவூட்டல் வேலைதிட்டம் - மூங்கிள் மற்றும் தும்பு சார்ந்த | அங்குனகொள பௌஸ்ஸ பிரதேச செயலகம் | செப்டம்பர் 21 | அங்குனகொள பௌஸ்ஸ விதாத்தா | 66 | | திரு.டபிள்யு.எம் பியரத்ன உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| அறிவூட்டல் வேலைதிட்டம் - மூங்கிள் மற்றும் தும்பு சார்ந்த | காலி போத்தல | செப்டம்பர் 11 | தேசிய அருங்கலைகள் பேரவை | 91 | | திரு.டபிள்யு.எம் பியரத்ன உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க மற்றும் தொழிநுட்ப பயிற்சி வேலைதிட்டம் - புடைவை பத்திக் | நத்தரம்பொத்த கண்டி | அக்டோபர்<br>02 நாட்கள் | ஏற்றுமதி வர்த்தக சபை | 20 | 6 | திரு.பி.கே.விஜேசிங்ஹ உதவி பணிப்பாளர் (நத்தரம்பொத்தை) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - **வாழ்வின்** எழுச்சி மரப் பொருட்கள் | பொலன்னறுவ மாவட்ட செயலகம் | செப்டம்பர் 07<br>02 நாட்கள் | பொலன்னறுவ பிரதேச செயலகம் | 75 | 40 | திரு.விஜித்த பண்டார உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |

| வேலைதிட்டத்தின் தன்மையும் கைவினைக் கைத்தொழிற் துறையும் | நடாத்தப்பட்ட இடங்கள் | ஆரம்பிக்கப்பட்ட திகதியும் நடைபெற்ற நாட்களும் | இணைப்பு நிறுவனம் | பயனாளிகளின் எண்ணிக்கை | அறிமுகப்படுத்திய புத்தாக்கங்களின் எண்ணிக்கை | பொறுப்பதிகாரி |
|---|---|---|---|---|---|---|
| போதனாசிரியர்களுக்கான தொழிற் பயிற்சி வேலைதிட்டம் - மரப் பொருட்கள் | சமூக சேவைத் திணைக்களம் - தொழிற் பயிற்சி பிரிவு - சீதுவை | அக்டோபர் 31 | சமூக சேவை திணைக்களம் | 7 | 21 | திரு.பர்ணாட் மனதுங்க உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| அறிவூட்டல் வேலைதிட்டம் - கைவினைக் கைத்தொழில் | தெஹிவளை பிரதேச செயலகம் | அக்டோபர் 08 | தெஹிவளை பிரதேச செயலகம் | 55 | | திரு.விஜித்த பண்டார உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| அறிவூட்டல் வேலைதிட்டம் - கைவினைக் கைத்தொழில் | கொலன்னாவபிரதேச செயலகம் | அக்டோபர் 15 | தெஹிவளை பிரதேச செயலகம் | 81 | | திரு.விஜித்த பண்டார உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| அறிவூட்டல் வேலைதிட்டம் - கைவினைக் கைத்தொழில் | கோட்டே பிரதேச செயலகம் | அக்டோபர் 16 | தெஹிவளை பிரதேச செயலகம் | 60 | | திரு.விஜித்த பண்டார உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| அறிவூட்டல் வேலைதிட்டம் - கைவினைக் கைத்தொழில் | கடுவெல பிரதேச செயலகம் | அக்டோபர் | தெஹிவளை பிரதேச செயலகம் | 342 | | திரு.விஜித்த பண்டார உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| அறிவூட்டல் வேலைதிட்டம் - மூங்கிள் மற்றும் பிரம்பு | வேவெல்தெனிய | அக்டோபர் 17 | ரதாவடுன்ன பிரம்பு சார்ந்த கூட்டுறவுச் சங்கம் | 10 | | திரு.டபிள்யு.எம் பியரத்ன உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| அறிவூட்டல் வேலைதிட்டம் - கைவினைக் கைத்தொழில் | கெஸ்பேவ பிரதேச செயலகம் | அக்டோபர் 18 | கெஸ்பேவ பிரதேச செயலகம் | 65 | | திரு.டபிள்யு.எம் பியரத்ன உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| அறிவூட்டல் வேலைதிட்டம் - கைவினைக் கைத்தொழில் | ஹோமாகம பிரதேச செயலகம் | அக்டோபர் 22 | ஹோமாகம பிரதேச செயலகம் | | | திரு.டபிள்யு.எம் பியரத்ன உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| அறிவூட்டல் வேலைதிட்டம் - கைவினைக் கைத்தொழில் | மொரட்டுவை பிரதேச செயலகம் | அக்டோபர் 23 | மொரட்டுவை பிரதேச செயலகம் | 92 | | திரு.டபிள்யு.எம் பியரத்ன உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| அறிவூட்டல் வேலைதிட்டம் - கைவினைக் கைத்தொழில் | மஹரகம பிரதேச செயலகம் | அக்டோபர் 25 | மஹரகம பிரதேச செயலகம் | 50 | | திரு.டபிள்யு.எம் பியரத்ன உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க மற்றும் தொழிநுட்ப பயிற்சி வேலைதிட்டம் - நாணற் புல் மற்றும் நார் | தாளன்குடா மட்டக்களப்பு | அக்டோபர் 18 04 நாட்கள் | பனை அபிவிருத்தி சபை | 175 | 20 | திருமதி.சோமலதா கம்லத் உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| தொழிநுட்ப செயன்முறை பயிற்சி வேலைதிட்டம் - பித்தளை வார்ப்பு | கிரிவவுல பிலிமத்தளாவ | நவம்பர் 16 - 04 நாட்கள் | தொழில் அபிவிருத்தி சங்கம் - கிரிவவுல | 15 | | திரு.டொரீன் சந்திரசேகர - வடிவமைப்பு அபிவிருத்தி அதிகாரி |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - செங்களி ஆபரணங்கள் | கொரத்தொட்ட கடுவெல | நவம்பர் 09 - 03 நாட்கள் | சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு கொழும்பு மாவட்டம் | 26 | | திரு.டொரீன் சந்திரசேகர - வடிவமைப்பு அபிவிருத்தி அதிகாரி |

| வேலைதிட்டத்தின் தன்மையும் கைவினைக் கைத்தொழிற் துறையும் | நடாத்தப்பட்ட இடங்கள் | ஆரம்பிக்கப்பட்ட திகதியும் நடைபெற்ற நாட்களும் | இணைப்பு நிறுவனம் | பயனாளிகளின் எண்ணிக்கை | அறிமுகப்படுத்திய புத்தாக்கங்களின் எண்ணிக்கை | பொறுப்பதிகாரி |
|---|---|---|---|---|---|---|
| புத்தாக்க மற்றும் தொழிநுட்ப பயிற்சி வேலைதிட்டம் - செங்களி | உடுகிரிவல களி பயிற்சி நிலையம் | நவம்பர் 07 - 03 நாட்கள் | கைத்தொழில் திணைக்களம் - தென்மாகாண சபை | 20 | 6 | திரு.விஜித்த பண்டார உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க மற்றும் தொழிநுட்ப பயிற்சி வேலைதிட்டம் - புடைவை பத்திக் | நத்தரம்பொத்த கண்டி | டிசம்பர் 12 - 05 நாட்கள் | மத்திய மாகாண வர்த்தக சபை | 13 | 3 | திரு.பி.கே.விஜேசிங்ஹ உதவி பணிப்பாளர் (நத்தரம்பொத்தை) |
| புத்தாக்க மற்றும் தொழிநுட்ப பயிற்சி வேலைதிட்டம் - தும்பு சார்ந்த | கடற்றொழிலாளர் நலன்புரி நிலையம் - பொத்துபிட்டடிய, வாத்துவ | டிசம்பர் 10 - 03 நாட்கள் | கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்களம் - களுத்தறை | 25 | 5 | திரு.சன்ன நதீஜ பெரேரா வடிவமைப்பு அபிவிருத்தி அதிகாரி |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - **வாழ்வின் எழுச்சி** மரப் பொருட்கள் | மட்டக்களப்பு பிரதேச செயலகம் | டிசம்பர் 08 - 02 நாட்கள் | மட்டக்களப்பு பிரதேச செயலகம | 25 | 22 | திரு.பர்ணாட் மனதுங்க உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - பீரளு ரேந்தை | வெலிகம பிரதேச செயலகம் - மாத்தறை | டிசம்பர் 13 | பொருளாதார அபிவிருத்தி சபை | 20 | 2 | திருமதி. தமரா தமயந்தி உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - மூங்கிள் சார்ந்த | அத்துரலிய விதாத்தா நிலையம் | டிசம்பர் 04 - 05 நாட்கள் | தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் அத்துரலிய விதாத்தா நிலையம் | 18 | 8 | திரு.டபிள்யு.எம் பியரத்ன உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |
| புத்தாக்க பயிற்சி வேலைதிட்டம் - நாணற் புல் மற்றும் நார் சார்ந்த | கம்புறுபிட்டிய - மாத்தறை | டிசம்பர் 04 - 05 நாட்கள் | தேசிய அருங்கலைகள் பேரவை | 25 | 5 | திருமதி.சோமலதா கம்லத் உதவி பணிப்பாளர் (வடிவமைப்பு அபிவிருத்தி) |

## கைவினைக் கைத்தொழிற் துறைக்கு புத்தாக்கங்களை அறிமுகப்படுத்துதல்

தற்கால சந்தைத் தேவைகளை இலக்குப்படுத்தி செயலாற்றும் தேசிய வடிவமைப்பு நிலையம், சந்தைக்குப் பொருத்தமான புத்தாக்கங்களை திட்டமிட்டு, அதன் ஆரம்ப மாதிரியை வேலைதளத்தில் உற்பத்தி செய்து, அம்மாதிரிகளை அறிவூட்டல் மற்றும் பயிற்சி வேலைதிட்டங்களின் வாயிலாக அறிமுகப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வது போன்றே நிறுவனத்திற்கு வருகை தரும் கலைஞர்களின் வேண்டுகோளுக்கிணங்கவும் அறிமுகப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. அதேபோன்று, தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் ஆண்டு தோறும் நடாத்தப்படும் காலத்திற்கேற்ப உற்பத்திகள் கண்காட்சி, சில்ப தேசிய கண்காட்சி மற்றும் பங்குபற்றும் ஏனைய கண்காட்சிகளில் இப்படைப்புகள் வெளியிடப்படுகின்றன. அதன்படி, 2012ம் ஆண்டில் 450 புத்தாக்கங்கள் கைவினைக் கைத்தொழிற் துறைக்கு அறிமுகப்படுத்தும் இலக்கை கொண்டிருந்ததாயினும், 471 உற்பத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

<u>அபிவிருத்தி கருத்திட்டங்களின் மூலம் தேசிய வடிவமைப்பு நிலையம் கைவினைக் கைத்தொழிற் துறையின்</u>

<u>வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு</u>

| 22 | டி.ஜே.பீரிஸ் | 11/11/1987 | 25 | 33,787.50 | 16,893.75 | 422,343.75 |
| 23 | எம். ஏ. சோமலதா | 01/03/1988 | 24 | 38,711.25 | 19,355.63 | 464,535.00 |
| 24 | டபிள்யு.ஏ.பி.கே.விஜேசிங்ஹ | 01/08/1988 | 24 | 39,976.25 | 19,988.13 | 479,715.00 |
| 25 | பாலித்த புஷ்பகுமார | 15/04/1988 | 24 | 23,445.00 | 11,722.50 | 281,340.00 |
| 26 | டபிள்யு.ஏ.குலத்திலக | 01/06/1988 | 24 | 23,111.50 | 11,555.75 | 277,338.00 |
| 27 | கே.பீ.ஜே.பெரேரா | 14/02/1989 | 23 | 23,278.25 | 11,639.13 | 267,699.88 |
| 28 | பீ.கே.கே.பெரேரா | 28/06/1989 | 23 | 23,082.75 | 11,541.38 | 265,451.63 |
| 29 | மானெல் ராஜபக்ஸ | 06/09/1989 | 23 | 29,607.50 | 14,803.75 | 340,486.25 |
| 30 | யு.ஏ.எல்.எஸ்.கே.ஜயத்திஸ்ஸ | 01/01/1990 | 22 | 23,116.50 | 11,558.25 | 254,281.50 |
| 31 | ஆர்.ஏ.பீ.உதயாங்கனி | 20/02/1990 | 22 | 27,543.50 | 13,771.25 | 302,978.50 |
| 32 | கே.கே.எஸ்.டி.சில்வா | 15/08/1991 | 21 | 27,775.50 | 13,887.75 | 291,642.75 |
| 33 | எம்.கே.மஹிந்த | 01/07/1992 | 20 | 25,055.50 | 12,527.75 | 250,555.00 |
| 34 | ஐ.ஏ.ஜி.சில்வா | 22/03/1993 | 19 | 22,944.75 | 11,472.38 | 217,975.13 |
| 35 | எல்.ஏ.குலரத்ன | 05/04/1993 | 19 | 22,865.00 | 11,432.50 | 217,217.50 |
| 36 | எச்.பீ.டி.தமயந்தி | 03/01/1994 | 18 | 35,548.75 | 17,774.38 | 319,938.75 |
| 37 | பீ.கே.ஏ.ரொட்ரிகோ | 15/06/1994 | 18 | 22,843.25 | 11,421.63 | 205,589.25 |
| 38 | ஏ.எம்.றி.கே.அழகியவண்ண | 02/05/1996 | 16 | 22,145.50 | 11,072.75 | 177,164.00 |
| 39 | பி. மனதுங்க | 03/06/1996 | 16 | 37,446.25 | 18,723.13 | 299,570.00 |
| 40 | ஜே.ஏ.ஏ.ஆர்.சி.குணரத்ன | 01/07/1996 | 16 | 39,508.75 | 19,754.38 | 316,070.00 |
| 41 | டி.எம்.ஏ.சந்திமா | 15/07/1996 | 16 | 24,257.00 | 12,128.50 | 194,056.00 |
| 42 | எம்.ஏ.ஆர்.யு.குணரத்ன | 16/07/1998 | 14 | 23,767.00 | 11,883.50 | 166,369.00 |
| 43 | சுசில் விஜேதுங்க | 01/09/1998 | 14 | 21,547.50 | 10,773.75 | 150,832.50 |
| 44 | டி.ஆர்.கொட்டுவேகெதர | 04/01/1999 | 13 | 28,953.50 | 14,476.75 | 188,197.75 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 45 | டபிள்யு. எம். பியரத்ன | 04/01/1999 | 13 | 31,972.25 | 15,986.13 | 207,819.63 |
| 46 | அஸித்த குஸலதம்ம | 04/01/1999 | 11 | 28,805.00 | 14,402.50 | 158,427.50 |
| 47 | ஆர்.எம்.விஜித்த பண்டார | 01/06/1999 | 13 | 31,142.75 | 15,571.38 | 202,427.88 |
| 48 | எஸ்.எஸ்.வீரசூரிய | 01/02/2000 | 12 | 23,526.00 | 11,763.00 | 141,156.00 |
| 49 | எம்.றி.தினேஸ் சில்வா | 01/02/2000 | 12 | 23,671.00 | 11,835.50 | 142,026.00 |
| 50 | பீ. சுஹத் ரோஹன | 01/02/2000 | 12 | 22,634.75 | 11,317.38 | 135,808.50 |
| 51 | சி.கே.கலன்சூரிய | 01/02/2000 | 12 | 23,866.50 | 11,933.25 | 143,199.00 |
| 52 | பீ.பீ.பியவத்தி | 01/02/2000 | 12 | 21,547.50 | 10,773.75 | 129,285.00 |
| 53 | எம்.டி.எம்.மொஹொட்டி | 01/02/2000 | 12 | 21,099.00 | 10,549.50 | 126,594.00 |
| 54 | கே.ஆர்.குமார | 01/02/2000 | 12 | 21,248.50 | 10,624.25 | 127,491.00 |
| 55 | பிரசாந்த கீர்த்திசந்திர | 13/12/2000 | 12 | 27,355.00 | 13,677.50 | 164,130.00 |
| 56 | பீ.சி.ஜே.டி.சில்வா | 15/08/2005 | 7 | 25,520.75 | 12,760.38 | 89,322.63 |
| 57 | ஜி.சி.என்.பெரேரா | 15/08/2005 | 7 | 26,585.75 | 13,292.88 | 93,050.13 |
| 58 | வீ.ஜீ.பீ.டீ.வீரநாயக | 15/08/2005 | 7 | 25,520.75 | 12,760.38 | 89,322.63 |
| 59 | எஸ்.டபிஜள்யு.விஜித்தானி | 25/10/2005 | 7 | 25,520.75 | 12,760.38 | 89,322.63 |
| 60 | பீ.ஆர்.ரணவீர | 15/02/2006 | 6 | 31,972.25 | 15,986.13 | 95,916.75 |
| 61 | ஆர்.எம்.காமினி ரத்நாயக்க | 12/12/2006 | 5 | 20,511.50 | 10,255.75 | 51,278.75 |
| | | | | | | 15,951,097.88 |
| | <u>பணிக் கொடை கொடுப்பனவுகள்</u> | | | | | |
| 1 | அஸித்த குஸலதம்ம | 04/01/1999 | 11 | 28,805.00 | 14,402.50 | 158,427.50 |
| 2 | ஆர்.எம்.அபய ராஜபக்ஸ | 24/09/1986 | 26 | 23,767.00 | 11,883.50 | 308,971.00 |
| 3 | டி.ஆர்.கொட்டுவேகெதர | 04/01/1999 | 13 | 28,953.30 | 14,476.75 | 188,197.75 |
| | | | | | | 655,596.25 |
| | | | | | | 15,295,501.63 |

டி.தர்மசிரி - சம்பளமற்ற விடுமுறை 03 வருடங்கள்

குறிப்பு - 13
திறைசேரி மானியம் - மீண்டெழும்

| | 2012<br>ரூ | 2011<br>ரூ | 2010<br>ரூ |
|---|---|---|---|
| சனவரி | 2,690,000.00 | 2,200,000.00 | 2,200,000.00 |
| பெப்ரவரி | 2,950,000.00 | 3,115,000.00 | 3,000,000.00 |
| மார்ச் | 2,890,000.00 | 3,100,000.00 | 3,000,000.00 |
| ஏப்ரில் | 2,190,000.00 | 3,000,000.00 | 2,200,000.00 |
| மே | 3,570,000.00 | 3,470,000.00 | 2,800,000.00 |
| ஜுன் | 3,190,000.00 | 3,070,000.00 | 2,100,000.00 |
| ஜுலை | 3,100,000.00 | 3,080,000.00 | 3,500,000.00 |
| ஆகஸ்ட் | 2,440,000.00 | 3,080,000.00 | 2,800,000.00 |
| செப்டம்பர் | 2,714,000.00 | 2,780,000.00 | 2,100,000.00 |
| அக்டோபர் | 3,711,000.00 | 2,900,000.00 | 2,500,000.00 |
| நவம்பர் | 2,220,000.00 | 2,000,000.00 | 3,050,000.00 |
| டிசம்பர் | 4,693,000.00 | 4,826,000.00 | 5,665,000.00 |
| | 36,358,000.00 | 36,621,000.00 | 34,915,000.00 |

திறைசேரி மானிய மூலதனம்

| | 2012<br>ரூ | 2011<br>ரூ | 2010<br>ரூ |
|---|---|---|---|
| திறைசேரி மானியம் - காசு | 3,150,000.00 | 3,270,000.00 | 5,500,000.00 |
| திறைசேரி மானியம் - வாகனம் | 16,150,000.00 | - | - |
| | 19,300,000.00 | 3,270,000.00 | 5,500,000.00 |

குறிப்பு 14 - ஏனைய வருமானங்கள்

| | குறிப்பு | 31.12.2012<br>ரூ | 31.12.2011<br>ரூ | 31.12.2010<br>ரூ |
|---|---|---|---|---|
| பயிற்சி வேலைதிட்டங்களின் வருமானம் | | 527,644.00 | 44,146.49 | 45,799.00 |
| தனியார் வாகனப் பாவனை வரி | | 9,000.00 | 8,585.48 | 9,446.78 |
| சம்பளமற்ற விடுமுறைக்கான மீளப் பெறுகை | | 173,152.92 | 127,972.19 | 121,646.79 |
| தொலைபேசி பாவனை | | 277.08 | - | 7,020.82 |
| கிடைக்கப் பெற்ற காப்புறுதிக் கோரிக்கைகள் | | 26,292.51 | - | - |
| இன்னோரன்ன வருமானங்கள் | | 165,394.50 | 357,734.10 | 486,250.50 |
| இலாப நட்டம் (உபகுறிப்பு 01) | 14.1 | 97,410.44 | 206,307.24 | (30,050.86) |
| நிருவாக கிரயத்தின் மீளப் பெற்றவைகள் | | - | 72,429.75 | 181,236.76 |
| அரச பங்களிப்பு | | - | 840.00 | 6,120.00 |
| அரச பங்களிப்பு | | 381,800.00 | - | - |
| அமைச்சிடமிருந்து கிடைக்கப் பெற்ற மானியங்கள் | | - | - | - |
| வடிவமைப்பு கல்விக் கணக்கு | | | | |
| வடிவமைப்பு கல்லூரிக் கட்டணங்கள் 2008-2010 | | - | - | 222,000.00 |
| வடிவமைப்பு கல்லூரி பதிவுக் கட்டணங்கள் 2010-2012 | | - | - | 34,000.00 |
| வடிவமைப்பு கல்லூரி பதிவுக் கட்டணங்கள் 2011-2013 | | 6,000.00 | 39,000.00 | - |
| வடிவமைப்பு கல்லூரிக் கட்டணங்கள் 2010-2012 | | 41,880.00 | 236,314.00 | 216,992.00 |
| வடிவமைப்பு கல்லூரிக் கட்டணங்கள் 2011-2013 | | 312,000.00 | 107,000.00 | - |
| வடிவமைப்பு கல்லூரி பதிவுக் கட்டணம் வார இறுதி வகுப்பு 2011-2013 | | 20,000.00 | 40,000.00 | - |
| வடிவமைப்பு கல்லூரி கட்டணங்கள் வார இறுதி வகுப்பு 2011-2013 | | 270,000.00 | 50,000.00 | - |
| வடிவமைப்பு மதியுரை வருமானம் | | | | |
| வடிவமைப்பு மதியுரை வருமானம் | | 175,138.40 | 184,143.64 | 442,521.23 |

| | | | | |
|---|---|---|---|---|
| மரக்கன்று கொள்களன் வருமானம் | 14.2 | (331,060.52) | 81,859.85 | - |
| வாழ்வின் எழுச்சி கண்காட்சி மற்றும் பயிற்சி வேலைதிட்டம் | | 2,161,169.06 | 913,276.71 | - |
| கோழிக் கூடு | | (76,145.50) | - | - |
| ஊழியர் கடன் கணக்கு | | | | |
| வட்டி வருமானம் | | 174,572.82 | 166,176.43 | 157,926.61 |
| பொது வசதிகள் நிலைய கணக்கு | | | | |
| சேவைக் கட்டணங்கள் | | - | 9,993.00 | 13,156.00 |
| பயிற்சி வேலைதிட்ட வருமானம் | | - | 72,553.85 | - |
| நிகர இலாபம் | | - | 15,071.30 | 6,165.20 |
| | | 4,134,525.71 | 2,741,396.03 | 1,920,230.83 |

உபகுறிப்பு 14.1

தேசிய வடிவமைப்பு நிலையம்

2009.12.31ல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்ட கணக்கு கூற்று

| | குறிப்பு | 31.12.2012<br>ரூ | 31.12.2011<br>ரூ | 31.12.2010<br>ரூ |
|---|---|---|---|---|
| வருமானம் (விற்பனை) | | 304,518.71 | 83,126.00 | 75,408.20 |
| விற்பனைக் கிரயம் (குறிப்பு 1.1) | 13.11 | 231,264.27 | 123,181.24 | (105,409.06) |
| நிகர இலாபம் | | 73,254.44 | - | (30,050.86) |
| பொது வசதிகள் நிலைய இலாபம் | | 24,156.00 | - | - |
| மொத்த இலாபம் | | 97,410.44 | 206,307.24 | (30,050.86) |

குறிப்பு 14-1-1 - விற்பனை கிரயம்

| | 31.12.2012<br>ரூ | 31.12.2011<br>ரூ | 31.12.2010<br>ரூ |
|---|---|---|---|
| மூலப் பொருட்கள் | | | |
| ஆரம்பக் கையிருப்பு (2012 சனவரி 1ம் திகதி) | 131,595.67 | 43,695.36 | 42,575.85 |
| கொள்வனவு | 350,787.05 | 218,063.69 | 271,056.85 |
| | 482,382.72 | 261,759.05 | 313,632.70 |
| கழி: | | | |
| இறுதிக் கையிருப்பு ( 2012 டிசம்பர் 31ம் திகதி) | 170,825.88 | 42,688.10 | 43,695.36 |
| பாவிக்கப்பட்ட பொருட்கள் | 311,556.84 | 219,070.95 | 269,937.34 |
| முடிவுப் பொருட்கள் | | | |
| ஆரம்பக் கையிருப்பு (2010 சனவரி 1ம் திகதி) | 2,070,634.65 | 1,602,656.96 | 1,438,178.68 |
| பாவிக்கப்பட்ட பொருட்கள் | 311,556.84 | 219,070.95 | 269,937.34 |
| கொள்வனவு | | 21,725.00 | |
| கழி: | 2,382,191.49 | 1,843,452.91 | 1,708,116.02 |
| கையிருப்பு (2011 டிசம்பர் 31ம் திகதி) | 2,150,927.22 | 1,966,634.15 | 1,602,656.96 |
| விற்பனைக் கிரயம் | 231,264.27 | (123,181.24) | 105,459.06 |

உபகுறிப்பு 14.2

| | 31.12.2012 ரூ | 31.12.2011 ரூ | 31.12.2010 ரூ |
|---|---|---|---|
| மரக்கன்று கொள்கலன் வருமானம் | | | |
| வருமானம் | 1,590,320.00 | 3,254,680.00 | - |
| கழி:கன்று கொள்கலன்களின் கிரயம் | | | |
| ஆரம்பக் கையிருப்பு | 325,000.00 | - | - |
| உற்பத்திக் கிரயம் | 1,705,700.00 | 3,283,800.00 | - |
| கழி:இறுதிக் கையிருப்பு | 144,500.00 | 325,000.00 | - |
| விற்பனைக் கிரயம் | 1,886,200.00 | 2,958,800.00 | - |
| நிகர வருமானம் | (295,880.00) | 295,880.00 | - |
| கழி:ஏனைய செலவினங்கள் | 35,180.52 | 206,028.15 | - |
| | (331,060.52) | 89,851.85 | - |

குறிப்பு 15
ஆளுக்குரிய வேதனாதிகள்

| | 31.12.2012 ரூ | 31.12.2011 ரூ | 31.12.2010 ரூ |
|---|---|---|---|
| சம்பளங்களும் வேதனங்களும் | 23,124,169.20 | 22,002,665.25 | 21,663,401.47 |
| ஓய்வூதிய நிதியம் | - | 62,245.52 | 101,115.00 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 2,392,408.91 | 1,815,177.96 | 1,900,991.79 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 689,369.91 | 633,590.10 | 626,198.16 |
| மேலதிக ஊதியம் | 1,071,400.31 | 973,160.09 | 976,587.94 |
| ஏனைய கொடுப்பனவுகள் | 611,215.50 | 204,487.12 | 102,738.38 |
| | 27,888,563.83 | 25,691,326.04 | 25,371,032.74 |

குறிப்பு 16
பிரயாண செலவினங்கள்

| | 31.12.2012 ரூ | 31.12.2011 ரூ | 31.12.2010 ரூ |
|---|---|---|---|
| உள்நாடு | 330,513.73 | 439,076.00 | 401,090.91 |
| வெளிநாடு | 207,177.15 | 8,000.00 | - |
| | 537,690.88 | 447,076.00 | 401,090.91 |

குறிப்பு 17
வழங்கல்கள்

| | 31.12.2012 ரூ | 31.12.2011 ரூ | 31.12.2010 ரூ |
|---|---|---|---|
| எழுதுபொருட்கள் மற்றும் அலுவலகத் தேவைகள் | 562,736.11 | 608,495.43 | 502,499.51 |
| எரிபொருள் செலவினங்கள் | 260,399.25 | 258,112.75 | 254,748.50 |
| சீருடைகள் | 71,568.00 | 53,358.00 | 46,170.00 |
| மருத்துவ செலவினங்கள் | 7,149.00 | 7,389.00 | 2,755.50 |
| | 901,852.36 | 927,355.18 | 806,173.51 |

குறிப்பு 18
பராமரிப்பு சேவைகள்

| | 31.12.2012<br>ரூ | 31.12.2011<br>ரூ | 31.12.2010<br>ரூ |
|---|---|---|---|
| வாகனப் பராமரிப்பு | 364,529.01 | 554,094.98 | 507,327.30 |
| கட்டிடப் பராமரிப்பு | 32,525.00 | 61,294.20 | 48,147.44 |
| பொறிகள், இயந்திரங்கள் | 16,784.00 | 21,959.92 | 39,294.00 |
| காரியாலய உபகரணங்கள் | 333,955.19 | 91,297.98 | 212,406.19 |
| | 747,793.20 | 728,647.08 | 807,174.93 |

குறிப்பு 19
ஒப்பந்த சேவைகள்

| | 31.12.2012<br>ரூ | 31.12.2011<br>ரூ | 31.12.2010<br>ரூ |
|---|---|---|---|
| போக்குவரத்து மற்றும் வாடகை கட்டணங்கள் | 619,557.50 | 339,293.68 | 470,,707.38 |
| தொலைபேசி கட்டணங்கள் | 460,329.10 | 414,166.00 | 440,022.63 |
| தபால் | 38,071.00 | 36,526.00 | 38,270.00 |
| நீர், மின்சாரம் | 753,874.30 | 636,577.80 | 592,084.73 |
| தலவரியும் வரிகளும் | - | 3,976.55 | 4,184.00 |
| மூலப்பொருட்களுக்கான ஆராய்ச்சி வேலைதிட்டம் | 50,000.00 | - | - |
| கைவினைத்திறன் பயிற்சி | 1,147,241.56 | 1,327,297.07 | 963,377.48 |
| புதிய வடிவமைப்பு கண்காட்சிகள் | 1,824,160.51 | 2,961,113.76 | - |
| இளைஞர் வடிவமைப்பு கண்காட்சி | 39,110.00 | 169,380.00 | - |
| ஏனைய கண்காட்சிகள் | 350,197.31 | 371,217.77 | 714,205.39 |
| வடிவமைப்பு விழிப்புணர்வூட்டல் வேலைதிட்டம் | - | - | 277,599.88 |
| சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நடவடிக்கைகள் | 38,394.00 | - | - |
| கைத்திறன் தொழில் விபரக்கொத்து | 18,537.50 | - | - |
| இணைய தள அபிவிருத்தி | 165,324.50 | - | - |
| வடிவமைப்பு காட்சியறை | 957,836.21 | 792,555.14 | - |
| யாழ் விழா மற்றும் விற்பனைச் சந்தை | 543,939.88 | - | - |
| ஊழியர் பயிற்சி | 112,824.50 | 29,550.00 | 51,425.00 |
| கணக்காய்வு கட்டணம் | 164,976.00 | - | 160,000.00 |
| சட்டக் கட்டணங்கள் | 7,000.00 | 96,150.00 | 70,687.00 |
| சுகாதார நடவடிக்கைகள் மற்றும் துப்புரவாக்கல் | 65,204.87 | 50,516.60 | 58,811.75 |
| விளம்பரம் | 165,200.00 | 114,105.60 | 68,200.00 |
| சிறுதொகை காசு மற்றும் நானாவித செலவினங்கள் | 126,191.98 | 161,832.50 | 89,219.70 |
| வங்கிக் கட்டணங்கள் | 12,910.00 | 14,433.67 | 14,932.76 |
| மொழிபெயர்ப்பு | 17,115.50 | - | - |
| செய்தித்தாள்கள் | 33,270.00 | 32,095.00 | 30,825.00 |
| ஒப்பந்த சேவைகள் (சேவை ஒப்பந்தங்கள்) | 97,259.06 | 88,269.46 | 115,468.45 |
| காப்புறுதி | 194,621.99 | 72,067.73 | 76,549.63 |
| வாகன அனுமதிப் பத்திரங்கள் | 24,701.84 | 14,618.45 | 11,909.40 |
| அரை சொகுசு வாகன வரி | 40,876.63 | - | - |
| ஆண்டறிக்கை அச்சிடல் | 199,123.00 | 49,158.00 | 140,000.00 |
| வாடிக்கையாளர்கள் சந்திப்பு | 260,240.00 | 202,569.95 | 224,764.25, |
| எரிபொருள் கொடுப்பனவுகள் | 404,689.65 | 372,967.68 | 435,172.62 |
| சபை பணிப்பாளர் கட்டணம் | 16,500.00 | 10,500.00 | 18,000.00 |
| சபை அங்கத்தவர் கட்டணம் | 170,000.00 | 97,000.00 | 32,000.00 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவம் | 79,000.00 | 75,000.00 | - |
| நட்டஈட்டுத் தொகை | - | 246,150.00 | - |
| சான்றிதழ்வழங்கும் விழா - யாழ்ப்பாணம் | - | 348,258.00 | - |
| பயிற்றுனர்களை பயிற்றுவிக்கும் பயிற்சி வேலைதிட்டம் | - | 30,265.00 | - |
| உள்நாட்டு பயிற்சி சேவைகள் | 6,216.23 | - | - |
| பாரம்பரிய கைத்தொழில் கிராம வேலைதிட்டம் | 9,204,494.62 | 9,158,011.41 | 5,098,417.05 |

குறிப்பு 20

தேய்மானம்

| | 31.12.2012<br>ரூ | 31.12.2011<br>ரூ | 31.12.2010<br>ரூ |
|---|---|---|---|
| கட்டிடங்கள் | 622,783.20 | 567,970.64 | 593,482.80 |
| இயந்திரங்கள் | 361,568.50 | 124,355.52 | 146,300.61 |
| அலுவலக உபகரணங்கள் | 334,992.44 | 340,506.05 | 336,789.57 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 211,497.15 | 90,255.03 | 98,579.99 |
| கருவிகள் | 6,972.00 | 3,289.06 | 3,050.66 |
| நூலக புத்தகங்கள் | 69,920.45 | 52,031.73 | 54,114.37 |
| கணனி | 670,966.82 | 558,356.53 | 452,852.16 |
| வாகனம் | 611,436.00 | 585,600.00 | 732,000.00 |
| | 2,890,136.56 | 2,322,364.56 | 2,417,170.16 |

குறிப்பு 21

ஏனைய செலவினங்கள்

| | 31.12.2012<br>ரூ | 31.12.2011<br>ரூ | 31.12.2010<br>ரூ |
|---|---|---|---|
| வடிவமைப்பு கல்விக் கணக்கு | | | |
| கல்வி நடவடிக்கைகள் | 390,066.75 | 565,388.53 | 549,848.01 |
| ஏனையவை | 14,624.00 | 6,900.00 | 9,600.00 |
| வடிவமைப்பு மதியுரை சேவைகள் | | | |
| வாழ்வின் எழுச்சி கண்காட்சி மற்றும் பயிற்சி வேலைதிட்டம் | 2,161,169.28 | 913,276.71 | - |
| ஏனைய செலவினங்கள் | 1,500.00 | 34,475.38 | 6,111.27 |
| பொது வசதிகள் நிலைய கணக்கு | | | |
| பயிற்சி வேலைதிட்ட செலவினங்கள் | - | 12,720.00 | - |
| சேதமடைந்த கையிருப்பு | - | 14,418.95 | - |
| ஊழியர் கடன் கணக்கு | | | |
| வங்கிக் கட்டணங்கள் | - | 1,388.45 | 2,335.75 |
| | 2,567,360.03 | 1,548,568.02 | 567,896.53 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. TC/A/NDC/FA/2012

ඔබේ අංකය / உமது இல / Your No.

දිනය / திகதி / Date 7 March 2014

Chairman,
National Design Centre

**Report of the Auditor General on the Financial Statements of the National Design Centre for the year ended 31 December 2012 in terms of Section 14(2) (c) of the Finance Act. No. 38 of 1971**

---

Reference to my letter of even number dated 04 January 2014 on the above subject.

02. The Tamil version of the above mentioned report is sent herewith.

W.P.C. Wickramarathne
Acting Auditor General

Copies to: 01. Secretary, Ministry of Traditional Industries and Small Enterprise Development
02. Secretary, Ministry of Finance and Planning.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone. 2887028 /034
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. : ரீசீ/ஏ/என்டீசீ/எப்ஏ/2012

ඔබේ අංකය / உமது இல / Your No. :

දිනය / திகதி / Date : 2013 சனவரி 04

தலைவர்,
தேசிய வடிவமைப்பு நிலையம்

**தேசிய வடிவமைப்பு நிலையத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய வடிவமைப்பு நிலையத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, காசோட்டக் கூற்று, உரிமை முலதன மாற்றங்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1982 இன் 35 ஆம் இலக்க தேசிய கைப்பணிகள் மன்றத்துடன் இணைந்த அதிகாரச்சட்டத்தின் 84(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிலையத்தின் வருடாந்த அறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை 2013 ஆகஸ்ட் 15 ஆந் திகதி நிலையத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone. 2887028 /034
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிலையத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய வடிவமைப்பு நிலையத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையத்தின் ஊழியர் கடன் நிதியக் கணக்கின் மீதி தனிப்பட்டோர் கடன் கணக்கின் படி ரூபா 4,365,469 ஆக காணப்பட்டதுடன் தனிப்பட்டோர் கடன் பட்டோலையின் படி அது ரூபா 4,316,590 ஆக காணப்பட்டமையால் ரூபா 48,879 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

#### 2.2.2 தொங்கல் கணக்கு

நிலையத்தின் வியாபார மற்றும் ஏனைய பெறுவனவுக் கணக்கின் கீழ் காட்டப்பட்டுள்ள தொங்கல் கணக்கின் மீதியான ரூபா 22,079 தொகையும் வியாபார மற்றும் ஏனைய கொடுப்பனவுக் கணக்கின் கீழ் காட்டப்பட்டுள்ள தொங்கல் கணக்கின் மீதியான ரூபா 456,382 தொகையும் 05 ஆண்டுகளாக முன்னெடுத்துவரப்பட்டிருந்த போதிலும் அதனை இனங்கண்டு கணக்கிணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காலப்பகுப்பாய்வின் படி இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட 05 ஆண்டுகளிற்கு குறைந்த மற்றும் 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட பழமையான அட்டுறுச் செலவினங்கள் முறையே ரூபா 590,901 மற்றும் ரூபா 226,938 இனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய கணக்குகளின் கூட்டுமொத்தம் ரூபா 9,843,064 ஆக காணப்பட்டதுடன் அதில் ரூபா 1,271,743 தொகை 05 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட மீதியாகும்.

(இ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு நிலையத்தின் வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டிய கணக்குகளின் கூட்டுமொத்தம் ரூபா 2,584,412 ஆக காணப்பட்டதுடன் அதில் ரூபா 935,037 தொகை 05 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட மீதியாகும்.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த பின்வரும் விடயங்களிற்கெதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிப்படவில்லை.

| | விபரம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | நிலையான சொத்துக்கள் | 26,821,575 | (i) நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| | | | (ii) மெய்மையாய்வுச் சபை அறிக்கை |
| | | | (iii) உரித்தாவணம் |
| (ஆ) | கடன்பட்டோர் | 5,622,119 | மீதி உறுதிப்படுத்தல்கள் |
| (இ) | கடன்கொடுத்தோர் | 3,040,794 | -மேற்படி- |

### 2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் கணனி வன்பாகங்கள் மற்றும் மென்பாகங்களிற்காக சொத்துக்கள் பதிவேடொன்று பேணிவரப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த வரைபு அறிக்கை குறித்த நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிதிக்கூற்றுக்கள் மாத்திரம் 2013 ஏப்ரல் 26 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, நிலையத்தின் ஒட்டுமொத்த செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா 36,358,000 மீண்டெழும் மானியத்தினை கணக்கிலெடுத்த பின்னர் ரூபா 3,636,112 தேறிய பற்றாக்குறையானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா 36,621,000 மீண்டெழும் மானியத்தினை கணக்கிலெடுத்த பின்னர் ரூபா 922,194 பற்றாக்குறையானமையால் நிதிவிளைவுகளில் ரூபா 2,713,918 தொகையான மேலும் பின்னடைவு அவதானிக்கப்பட்டது. இருப்பினும், அரசாங்கத்தின் மீண்டெழும் மானியத்தைக் கணக்கிலெடுக்காதிருப்பின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு பற்றாக்குறை ரூபா 39,994,112 ஆக காணப்படுவதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் தேறிய பற்றாக்குறை ரூபா 37,543,194 ஆக காணப்பட்டது.

முன்னைய ஒப்பிடுகையில் தனியாள் வேதனாதிகள் ரூபா 2,197,237 இனால் அல்லது 8.5 சதவீதத்தாலும் ஏனைய செலவினம் ரூபா 1,018,792 இனால் அல்லது 65 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தமை நிதி விளைவுகளின் பின்னடைவிற்கு முக்கிய காரணியாக அமைந்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொரட்டுவை மற்றும் நத்தரம்பொத செயற்திட்டத்தினால் உற்பத்திசெய்யப்பட்ட வடிவமைப்புகள் மற்றும் புதிய ஆக்கங்களின் எண்ணிக்கை 672 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 381 வேலைத்தளங்களிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. ஒப்படைக்கப்பட்டிருந்த ஆக்கங்களில் கைப்பணியாளர்களின் தேவைக்கான 205 ஆக்கங்களும், 86 கிரபிக் வடிவமைப்புக்களும் அடங்கியிருந்தன. முன்னைய ஆண்டில் உற்பத்திசெய்யப்பட்ட வடிவமைப்புகள் மற்றும் புதிய ஆக்கங்களின் எண்ணிக்கை 679 ஆகவும் வடிவமைப்பு மாதிரிகள் 321 ஆகவும் காணப்பட்டதுடன் அவற்றுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் வடிவமைப்புகள் மற்றும் புதிய ஆக்கங்களின் எண்ணிக்கை 1 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. மேலும் இந்த வடிவமைப்பு ஆக்கங்கள் அனைத்தையும் கைப்பணியாளர்களின் காலடிக்கு எடுத்துச் செல்வதற்காக போதிய

வேலைத்திட்டமொன்று தேசிய கைப்பணிகள் மன்றத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிலையத்திற்குச் சொந்தமாக 10 வடிவமைப்பாளர்கள் காணப்படுவதுடன் ஒரு வடிவமைப்பாளர் மாதமொன்றில் குறைந்தது 05 நிர்மாணங்களை மேற்கொள்ள வேண்டுமென இலக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ்விலக்கினை அடைவதற்கு மூன்று வடிவமைப்பாளர்கள் தவறியிருந்தனர். அவ்வாறே இந்நிர்மாணங்களில் எவ்வளவு தொகை பிரபல்யப்படுத்தலிற்காக கைப்பணியாளர்களிடையே கொண்டு செல்லப்பட்டன, எவ்வளவு தொகையானவை கைப்பணியாளர்களிடையே பிரபல்யம் பெற்றிருந்தன போன்றவற்றை ஆய்ந்தறிவதற்கான முறையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக உற்பத்திசெய்யப்பட்ட புதிய வடிவமைப்புக்களில் எந்தளவு எண்ணிக்கையானவை பயனுள்ளதாக இருந்தன என்பது சிக்கலானதாக காணப்பட்டது.

(ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி இலக்கிடப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்டங்களில் 03 நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முடியாது போயிருந்தது. எஞ்சிய 2 நிகழ்ச்சித்திட்டங்கள் பெற்றுக்கொண்டிருந்த செயன்முன்னேற்றங்கள் 20 சதவீதம் மற்றும் 40 சதவீதமாக காணப்பட்டன. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செயற்பாடுகள் | 2012 ஆம் ஆண்டில் எதிர்பாத்த இலக்கு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடையப்பட்ட இலக்கு | அடையப் பெற்ற முன்னேற்ற சதவீதம் |
|---|---|---|---|
| | அலகு | அலகு | % |
| **மீண்டெழும் செயற்பாடுகள்** | | | |
| பயிலுனர்களை பயிற்றுவித்தல் | | | |
| புதிய ஆக்கங்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்ட எண்ணிக்கை | 10 | 02 | 20 |
| பங்குபற்றியோர் எண்ணிக்கை | 150 | 29 | 19 |
| வடிவமைப்பு அபிவிருத்திக்காக பயிற்சி மற்றும் தொழில்நுட்பத்தை வழங்குதல் | | | |
| உயர் தேசிய வடிவமைப்பு டிப்ளோமா | 60 | 0 | 0 |
| தேசிய வடிவமைப்பு இடைக்கால டிப்ளோமா (இரண்டாம் ஆண்டு) | 30 | 0 | 0 |

| | | | |
|---|---|---|---|
| புதிய வடிவமைப்புக்களிற்காக சந்தை வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல் | | | |
| காட்சிப்படுத்துவதற்கு உத்ததேசிக்கப்பட்ட கைப்பணி ஆக்கங்களின் எண்ணிக்கை | 385 | 0 | 0 |
| பங்குபற்றிய கைப்பணி ஆக்க கைப்பணியாளர் எண்ணிக்கை | 300 | 0 | 0 |
| பங்குபற்றிய சாதாரண பொதுமக்கள் | 6000 | 0 | 0 |
| கொள்வனவு மற்றும் விற்பனையாளர் கூட்டங்களின் எண்ணிக்கை | 01 | 0 | 0 |
| நலனாளிகளின் எண்ணிக்கை | 50 | 0 | 0 |
| உல்லாசப் பயணிகளை இலக்காகக் கொண்ட காட்சிக்கூடங்களின் எண்ணிக்கை | 02 | 0 | 0 |
| வடிவமைப்பு சந்தை வசதிகளை வழங்குதல் | 30 | 12 | 40 |

**(இ)** செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, 2012 ஆம் ஆண்டில் 09 துறைகள் தொடர்பில் காலப்பகுதியில் மேற்கொள்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிட்டவாறு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

புதிய காட்சியறை – பத்தரமுல்லை.

நிலையத்தின் காட்சியறைகளினூடாக புதிய வடிவமைப்புக்களை பிரபல்யப்படுத்தல், செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி நிறைவேற்றப்பட வேண்டிய அடிப்படை நோக்கமாக காணப்பட்ட போதிலும், காட்சியறைகள் மீளாய்வாண்டில் மூடப்பட்டமை காரணமாக இந்நோக்கத்தினை அடைந்துகொள்வதற்கு தவறவிடப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) 2011ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த புதிய காட்சியறை 2012 ஆகஸ்ட் மாதம் முதல் மூடிவிடப்பட்டிருந்தது. 2012 ஆகஸ்ட் மாதம் முதல் ஒத்தோபர் வரை மாதத்திற்கு ரூபா 80,000 வீதம் வாடகையாக ரூபா 240,000 தொகையும் பாதுகாப்புச் செலவினமாக ரூபா 324,612 தொகையும் ஏனைய செலவுகளிற்காக ரூபா 38,104 தொகையுமாக மொத்தம் ரூபா 602,716 மற்றும் 2011 ஆம் ஆண்டில் காட்சியறையின் ஆரம்ப நடவடிக்கைகளிற்காக செலவிடப்பட்ட ரூபா 2,280,911 தொகை என்பன பயனற்ற செலவினங்களாகியிருந்தன.

(ஆ) தனியார் நிறுவனமொன்றிடமிருந்து 2011 செப்தெம்பர் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்டிருந்த ரூபா 998,400 பொருட்பதிவேட்டுப் பொருட்கள் காட்சியறை மூடப்பட்டதன் பின்னர் தலைமை அலுவலகத்தில் ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்ததுடன் 2013 ஒக்தோபர் 03 ஆந் திகதி வரை அப்பொருட்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

(இ) நத்தரம்பொத கிளையிலிருந்து காட்சியறைகளிற்கு அனுப்புவதற்காக 2012 ஏப்ரல் மாதம் அனுப்பப்பட்டிருந்த ரூபா 250,024 பெறுமதியான 338 மாதிரிகள் தலைமை அலுவலகத்தில் ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்ததுடன் அந்த மாதிரிகளின் ஒரு பகுதி 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தலைமை அலுவலகத்தில் விளைவற்றுக் காணப்பட்டன.

## 4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையத்திற்கு ஒப்படைக்கப்பட்ட மத்திய மாகாண சிறு கைத்தொழில் திணைக்களத்தினால் நிர்மாணிக்கப்பட்ட காட்சிறையும் 1018 சதுர அடிகள் கொண்ட ரூபா 1,100,000 பெறுமதியான கட்டிடங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் எவ்விதப் பயன்பாடுமின்றி விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) நிலையம் இலங்கை உல்லாசப் பிரணாணச் சபையுடன் இணைந்து ரூபா 68,470,615 செலவில் நத்தரம்பொத கலாபுர கிராமத்தில் பொது வசதிகள் நிலையம் மற்றும் ஓய்வு விடுதி நிர்மாணித்து அதற்காக இயந்திரங்களைக் கொள்வனவு செய்து கைப்பணியாளர் சங்கத்திற்கு ஒப்படைந்திருந்த போதிலும், 03 ஆண்டு காலமாக அவை விளைவற்றுக் காணப்பட்டன.

(இ) கலாபுர கிராமத்தில் பொது வசதிகள் நிலையத்தின் வாகன தரிப்பிடம், விளையாட்டரங்கு மற்றும் மதகினை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,008,576 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், இந்நிலப்பகுதி எவ்விதப் பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது பயன்பாடின்றிக் காணப்பட்டன. வாகன தரிப்பிடம் மற்றும் விளையாட்டரங்கு என்பவற்றிற்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பக்கவாட்டு மதகின் ஏறத்தாழ 20 அடிகள் உடைந்து மூன்று ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், அது முன்னைய நிலைக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மதியுரைஞர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்காமையால் பொது வசதிகள் நிலையத்தின் தோற்பொருட்கள் பிரிவின் ரூபா 5,000,000 பெறுமதியான இயந்திர உபகரணங்கள், அண்ணளவாக இரண்டு ஆண்டுகளாக விளைவற்றும் குறைப்பயன்பாடுடையனவாகவும் காணப்பட்டன.

(உ) நத்தரம்பொத கிளையின் இரசாயண கூடத்திற்குப் பொறுப்பாக செயற்பட்ட உத்தியோகத்தர் 2010 இன் தொடக்கத்தில் வெளிநாடு சென்றிருந்ததுடன் அந்த உத்தியோகத்தரினால் இரசாயண கூடப் பதிவேட்டுப் பொருட்கள் எதனையும் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இருப்புப் பதிவேட்டிலுள்ள பதிவுகளின் படி இரசாயண கூடத்தின் ரூபா 145,089 தொகையான 79 பதிவேட்டுப் பொருட்களும் ரூபா 47,074 தொகையான 48 ஆய்வுகூட பொருட்களும் 2010 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் விளைவற்றுக் காணப்பட்டன.

## 4.4 பதவியணி நிர்வாகம்

நிலையத்தின் 2012 ஆம் ஆண்டிற்கான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| நிறைவேற்றுத் தரத்தினர் | 01 | 01 | - |
| மத்திய தரத்தினர் | 18 | 09 | 09 |
| இரண்டாம் மட்டத்தினர் | 39 | 24 | 15 |
| ஆரம்ப மட்டத்தினர் | 46 | 35 | 11 |
| | 104 | 69 | 35 |

மத்திய தரத்திலுள்ள 09 வெற்றிடங்களையும் இரண்டாம் தரத்திலுள்ள 15 வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

# 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

நிலயத்தினால் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தாயாரிக்கப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்த்த இலக்குகளை அடைவதற்கு தவறவிடப்பட்டிருந்தது. இலக்கிடப்பட்டிருந்த சில பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 5.2 கொள்வனவுத் திட்டம்

நிலையத்தினால் 2012 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் இது அரசாங்கப் பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடுசெய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களிற்கும் செலவினங்களிற்குமிடையே குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5.4 உள்ளகக் கணக்காய்வு

2012 ஆம் ஆண்டிற்காக உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டமொன்று திட்டமிடப்பட்டிருந்த போதிலும், திட்டத்தின் படி கணக்காய்வு நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிலையத்தின் தலைவரிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய மீதிகள்

(இ) சொத்துக்கள் கட்டுப்பாடு

(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(உ) பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்

எச். ஏ. எஸ். சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி.